**MARUDHAR KESARI JAIN COLLEG FOR WOMEN, VANIYAMBADI**

**PG & RESEARCH DEPARTMENT OF TAMIL**

**e-Notes (Study Material)**

**I MA TAMIL**

| | |
|---|---|
| **CORE COURSE : பக்திஇலக்கியம்** | **CODE :** 24PTAC21 |

**Unit 4 – அருணகிரிநாதர், தாயுமானவர், ராமலிங்க அடிகளார்**

## Learning Objectives

தமிழின் பக்தி இலக்கிய வரலாற்றையும் வளத்தையும் அறிதல்.

சைவ இலக்கியங்கள் வழி இலக்கிய நயங்களையும் பக்தி போக்குகளையும் அறிதல்.

வைணவ இலக்கியங்களின் வலி இலக்கிய நயங்களையும் பக்தி போக்குகளையும் அறிதல்.

பிற்கால பக்தி இலக்கியப் போக்கினை உணரும் வகையில் அருணகிரிநாதர் தாயுமானவர் ராமலிங்க அடிகளார் ஆகியோரின் ஆளுமைகளை கண்டறிதல்.

இஸ்லாமின் கிருத்துவ பக்தி இலக்கிய போக்கை உலக சமயப் போக்கு நிலைப்பாடல் வழி கற்றல்.

## Course Outcomes

பிற்காலத்தில் இலக்கிய வளர்ச்சிகளை அருணகிரிநாதர் தாயுமானவர் ராமலிங்க ஆகியோர் வழி அறிந்து கொள்வர்.

**OUTCOMES**

**அருணகிரிநாதர், தாயுமானவர், ராமலிங்க அடிகளார்**

1. அருணகிரிநாதர்-திருப்புகழ்
    - கைத்தல நிறைகனி
    - முத்தைத்தரு
    - பக்தியால் யாணுனை
2. தாயுமானவர் பாடல்கள்
    - பராபரக்கண்ணி - சீராரும் தெய்வ திருவருளாம்… முதல் அல்லும் பகலும் என காசை பராபரமே முடிய 50 கண்ணிகள்
3. ராமலிங்க அடிகள் - திருவருட்பா
    - அம்பலத்தரசே அருமருந்தே…….

பிள்ளை சிறு விண்ணப்பம் (முதல் 10 பாடல்கள்)

## 1.அருணகிரிநாதர் குறிப்பு;

திருப்புகழ் என்பது முருகக் கடவுள் மீது அருணகிரிநாதர் இயற்றிய ஒரு பக்தி நூல். அருணகிரிநாதர் கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் திருவண்ணாமலையில் பிறந்து வாழ்ந்தவர். திருப்புகழை தேவாரம், திருவாசகம் போல் மந்திர நூலாகவும், நாள்தோறும் இறைவனைப் போற்றிப் புகழ்பாடும் நூலாகவும், முருகன் மீது பக்தி கொண்டோர் பின்பற்றும் நூலாகவும் கொள்கின்றனர். திருப்புகழில் உள்ள இசைத்தாளங்கள், இசை நூல்கள் எதிலும் அடங்காத தனித்தன்மை பெற்றவை.

விநாயகர் துதி ;

கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்

மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே

முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா

அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

**பாடல் விளக்கம் ;**

கைத்தல நிறைகனி அப்ப மொடு அவல் பொரி கப்பிய
கரிமுகன் அடிபேணி ... கரதலத்தில் நிறைந்துள்ள பழம், அப்பம்,
அவல், பொரி (இவைகளை) வாரி உண்ணும் யானை முகக்
கடவுளின்
திருவடிகளை விரும்பி,

கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ கற்பகம் எனவினை
கடிதேகும் ... அறிவு நூல்களைக் கற்கும் அடியவர்களுடைய மனதில்
நீங்காது வாழ்பவனே, நினைத்தவற்றை அளிக்கும் கற்பக விருட்சமே,
என்று உன்னைத் துதி செய்தால் வினைகள் யாவும் விரைவில்
ஓடிப் போய்விடும்.

மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன் மற்பொரு
திரள்புய மதயானை ... ஊமத்த மலரும், (பிறைச்) சந்திரனும்
சடையில் தரித்த சிவபெருமானுடைய மகனும், மற்போருக்குத் தக்க
திரண்ட தோள்களையுடையவனும், மத யானையை ஒத்தவனும்,

மத்தள வயிறனை உத்தமி புதல்வனை மட்டு அவிழ்
மலர்கொ(ண்)டு பணிவேனே ... மத்தளம் போன்ற பெருவயிறு
உடையவனும், உத்தமியாகிய பார்வதியின் மகனும் ஆகிய
கணபதியைத்
தேன் துளிர்க்கும் புது மலர்களைக் கொண்டு நான் வணங்குவேன்.

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில் முற்பட எழுதிய
முதல்வோனே ... இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் நூல் முறைமையை, மலைகளுள் முற்பட்டதான மேரு மலையில் முதல் முதலில் எழுதிய முதன்மையானவனே,

முப்புரம் எரி செய்த அச்சிவன் உறை ரதம் அச்சு அது
பொடிசெய்த அதிதீரா ... (அசுரர்களின்) திரி புரங்களையும் எரித்த அந்தச் சிவ பெருமான் எழுந்தருளிய ரதத்தின் சக்கர அச்சை ஒடித்துத்
தூளாக்கிய மிகுந்த தீரனே*,

அத்துயர் அது கொ(ண்)டு சுப்பிரமணி படும் அப்புனம்
அதனிடை இபமாகி ... (வள்ளி மீது கொண்ட காதலாகிய) அந்தத் துயரத்தோடு (உன் தம்பியாகிய) சுப்பிரமணியன் நடந்த அந்தத் தினைப்
புனத்திடையில் யானையாகத் தோன்றி,

அக்குற மகளுடன் அச்சிறு முருகனை அக்கணம் மணம்
அருள் பெருமாளே. ... அந்தக் குற மகளாகிய வள்ளியுடன் அந்தச் சிறிய முருக வேளை அத்தருணத்திலேயே மணம் புரியுமாறு திருவருள்
பாலித்த பெருமாளே.

**வினாக்கள்;**

1. அருணகிரிநாதர் குறிப்பு?
2. திருப்புகழ் பற்றி சிறுகுறிப்பு வரைக?
3. விநாயகரின் தோற்றத்தை பற்றி அருணகிரிநாதர் எவ்வாறு கூறுகிறார்?
4. கரிமுகனின் சிறப்பினை எவ்வாறு அருணகிரிநாதர் வெளிப்படுத்துகிறார்?
5. விநாயகர் அதிகமாக விரும்பக் கூடியவை யாவை ?
6. விநாயகரே வணங்குபவருக்கு எவ்வாறு அருள் கிடைக்கும்?
7. முழுமுதல் கடவுள் என விநாயகரை அழைப்பதற்கான காரணம் என்ன?
8. விநாயகர் துதியில் இடம்பெற்றுள்ள சிறப்புகள் யாவை?
9. சிவனின் இரத்தத்தை எரித்தவர் யார்?

10. அடியவர்களுக்கு அறிமுகத்தால் எவ்வாறு அருளுவார்?

முருகன் துதி ;

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரும்
முப்பத்துமு வர்க்கத் தமரரும் அடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே

பாடல் விளக்கம்;

முத்தைத்தரு பத்தித் திருநகை ... வெண்முத்தை நிகர்த்த, அழகான பல்வரிசையும் இளநகையும் அமைந்த

அத்திக்கு இறை ... தேவயானை* தேவியின் தலைவனே,

சத்திச் சரவண ... சக்திவேல் ஆயுதத்தை ஏந்தும் சரவணபவக் கடவுளே,

முத்திக்கொரு வித்துக் குருபர ... மோக்ஷ வீட்டுக்கு ஒப்பற்ற ஒரு விதையாக விளங்கும் ஞான குருவே,

எனவோதும் முக்கட்பரமற்கு ... என்று துதிக்கும் முக்கண்ணர் பரமசிவனார்க்கு

சுருதியின் முற்பட்டது கற்பித்து ... வேதங்களுக்கு முதன்மையான ஓம் என்னும் மந்திரத்தை உபதேசித்து,

இருவரும் ... (மும்மூர்த்திகளில் எஞ்சியுள்ள) பிரம்மா, திருமால் ஆகிய
இருவரும்,

முப்பத்துமுவர்க்கத்து அமரரும் அடிபேண ... முப்பத்து முக்கொடி தேவர்களும் அடி பணிய நின்றவனே,

பத்துத்தலை தத்தக் கணைதொடு ... இராவணனுடைய பத்துத் தலைகளும் சிதறி விழுமாறு அம்பை விட்டு,

ஒற்றைக்கிரி மத்தைப் பொருது ... ஒப்பற்ற மந்திர மலையான மதத்தைக்
கொண்டு பாற்கடலைக் கடைந்து,

ஒரு பட்டப்பகல் வட்டத் திகிரியில் இரவாக ... ஒரு பகற் பொழுதை வட்டமான சக்ராயுதத்தால் இரவு ஆக்கி,

பத்தற்கு இரதத்தைக் கடவிய ... நண்பனாகிய அர்ச்சுனனுக்கு, தேர்ப்பாகனாக வந்து தேரினைச் செலுத்திய

பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள் ... பசுமையான நீலமேகவண்ணன் திருமால் பாராட்டும் பரம்பொருளே,

பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ஒருநாளே... பரிவோடு என்னைக் காத்தருளும் நாள் ஒன்றும் உண்டோ?

(இப்பாடலின் பிற்பகுதி முருகன் அசுரர்களுடன் செய்த பொரினை விரிவாக வருணிக்கிறது).

தித்தித்தெய ஒத்தப் பரிபுர ... தித்தித்தெய என்ற தாளத்துக்கு ஒத்து, சிலம்புகள் அணிந்த

நிர்ப்பந்தம் வைத்துப் பயிரவி ... நாட்டியப் பாதங்களை வைத்து காளிதேவி

திக்கொட்க நடிக்க ... திசைகளில் எல்லாம் சுழன்று தாண்டவம் செய்யவும்,

கழுகொடு கழுதாட ... கழுகுகளோடு பேய்கள் சேர்ந்து ஆடவும்,

திக்குப்பரி அட்டப் பயிரவர் ... எட்டுத் திக்குகளிலும் உலகங்களைத் தாங்குகின்ற அஷ்ட பைரவர்கள்**

சித்ரபவுரிக்கு ... இந்த அழகிய கூத்துக்கு ஏற்ப

தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு திரிகடக
எனவோத ... 'தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு திரிகடக' என்ற தாள ஓசையைக் கூறவும்,

கொத்துப்பறை கொட்ட ... கூட்டமாகப் பற்பல பறை வாத்தியங்களை அதே தாளத்தில் முழக்கவும்,

களமிசை முதுகூகை ... போர்க்களத்தில் கிழக் கோட்டான்கள்

குக்குக்குகு குக்குக் குகுகுகு குத்திப்புதை புக்குப் பிடியென
கொட்புற்றெழ ... 'குக்குக்குகு குக்குக் குகுகுகு' என்ற ஓசையோடு 'குத்திப் புதை, புகுந்து பிடி' என்றெல்லாம் குழறி வட்டமாகச் சுழன்று மேலே எழவும்,

நட்பற்ற அவுணரை ... சினேக எண்ணம் தவிர்த்து விரோத மனப்பான்மையே கொண்ட அசுரர்களை

வெட்டிப்பலியிட்டுக் குலகிரிகுத்துப்பட ... கொன்று பலி கொடுத்து, அசுரர் குல மலை கிரௌஞ்சகிரி தூளாக,

ஒத்துப் பொரவல பெருமாளே. ... தர்ம மார்க்கத்துக்குப் பொருந்த, போர் செய்யவல்ல பெருமாளே.

வினாக்கள் ;

1. திருப்புகழை இயற்றியவர் யார்?
2. ரத்தினகிரியில் வீற்றிருப்பவர் யார்?
3. முருகனின் ஆறுபடை வீடுகள் யாவை?
4. தமிழ் கடவுள் என அழைக்கப்படுபவர் யார்?
5. முருகப்பெருமாள் சூரரை வதம் செய்ததின் காரணம் யாது?
6. ஆசிரியர்களை வேளாளர் அளித்தவர் யார்?
7. மயிலை வாகனமாக உடையவர் யார்?
8. தமிழுக்கும் முருகனுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கி எழுதுக?
9. அடியவர்களுக்கு முருகப்பெருமான் எவ்வாறு அருள்வார்?
10. ரத்தனகிரி முருகனின் சிறப்புகளாக அருணகிரிநாதர் கூறுவனற்றை தொகுத்து எழுதுக?

**திருவருட்பா - இராமலிங்க அடிகளார்**

**ராமலிங்க அடிகளார் சிறு குறிப்பு ;**

இராமலிங்க அடிகளார் அக்டோபர் 5-ந் தேதி 1823-ம் ஆண்டு சிதம்பரத்தை அடுத்துள்ள மருதூரில் இராமையா-சின்னம்மாள் இணையருக்கு 5 வது மகனாகப் பிறந்தார். வடலூர் இராமலிங்கம் என அறியப்படுபவர். ஓதாதுணர்ந்த அறிஞர். சமூக சீர்திருத்தவாதி, ஆன்மிகச் சொற்பொழிவாளர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், மொழி ஆய்வாளர், சித்த மருத்துவர், பொதுத் தொண்டாற்றியப் புனிதர் என பன்முகங்களைக் கொண்டவர்.

திருவருட் பிரகாச வள்ளலார் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்படுபவர்.

பிள்ளை சிறு விண்ணப்பம்;

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

1.

தடித்தஓர் மகனைத் தந்தைஈண் டடித்தால்
தாயுடன் அணைப்பள்தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மைஅப் பாஇனி ஆற்றேன்.

உரை:

அம்மையும் அப்பனுமாகிய பெருமானே, வளர்ச்சியால் உடல் தடித்த மகன் செய்த தவறு கண்டு தந்தை யவனை யடிப்பானாயின், உடனே தாய் அவ்விடம் போந்து தடுத்துத் தன் மகனை அணைத்துக் கொள்வாள்; தாய் அடிப்பாளாயின், தன் கையிற் பற்றிப் பிடித்துக் கொண்டு தந்தை தன்னோடு அணைத்துக் கொள்வான்; திருநீறணிந்த திருமேனியை யுடையனாய்த் தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடும் தூயவனே, இவ்வுலகில் எனக்கு நூல்கள் உரைத்த தந்தையும் தாயும் நீயாதலால் இதுவரை உலகியல் துன்பங்களால் என்னை வருத்தியது போதும்; இனி உனதருளால் என்னை ஆதரிக்க வேண்டும்; இனிமேல் இத்துன்பத்தைப் பொறுக்க மாட்டேன். எ.று.

2.

பெற்றதம் பிள்ளைக் குணங்களை எல்லாம்
பெற்றவர் அறிவரே அல்லால்
மற்றவர் அறியார் என்றனை ஈன்ற
வள்ளலே மன்றிலே நடிக்கும்
கொற்றவ ஓர்எண் குணத்தவ நீதான்
குறிக்கொண்ட கொடியனேன் குணங்கள்
முற்றும்நன் கறிவாய் அறிந்தும்என் றனைநீ
முனிவதென் முனிவுதீர்ந் தருளே.

உரை:

அம்பலத்திலே திருக்கூத் தியற்றும் அருளரசே, என் குணங்களை யுடைய இறைவனே, என்னைப் பெற்ற அருள் வள்ளலே, தாம் பெற்ற பிள்ளைகளின் குணங்களை யெல்லாம் பெற்றவராகிய தாய் தந்தையர் அறிவார்களே யன்றி மற்றவர்கள் அறிய மாட்டார்கள்; நான் மேற் கொண்டுள்ள குணங்களாற் கொடியவனாயினேன்; என்னுடைய குணங்கள் அனைத்தையும் நீ முற்றவும் நன்கறிவாய்; அறிந்திருந்தும் வெறுப்பது ஏன்? வெறுப்பகன்று ஆண்டருள்க. எ.று.

3.

வெம்மதிக் கொடிய மகன்கொடுஞ் செய்கை
  விரும்பினும் அங்ஙனம் புரியச்
சம்மதிக் கின்றார் அவன்றனைப் பெற்ற
  தந்தைதாய் மகன்விருப் பாலே
இம்மதிச் சிறியேன் விழைந்ததொன் றிலைநீ
  என்றனை விழைவிக்க விழைந்தேன்
செம்மதிக் கருணைத் திருநெறி இதுநின்
  திருவுளம் அறியுமே எந்தாய்.

உரை:

வெவ்விய அறிவும் கொடுமைப் பண்புமுடைய மகன் கொடிய செயலொன்றைச் செய்யவிரும்புவானாயின், மகன்பால் உள்ள ஆசையால் அவனைப் பெற்ற தாயும் தந்தையும் அவன் புரியும் கொடுஞ் செயலுக்கு உடன்படுகின்றனர்; இந்த மதியுடைய சிறியவனாகிய யான் குற்ற மொன்றும், செய்ததில்லை; என் மனத்தில் உன்பால் அன்புண்டாகச் செய்தமையால் நான் உன்பால் அன்பு கொண்டேன்; செவ்விய அறிஞர் மதிக்கும் அருளமைந்த திருநெறியும் இதுவாகும்; இவை யனைத்தும் சிவ பெருமானாகிய எந்தையே, உனது திருவுள்ளம் அறிந்த செய்தி யன்றோ. எ.று.

4.

பொய்பிழை அனந்தம் புகல்கின்றேன் அதில்ஓர்
  புல்முனை ஆயினும் பிறர்க்கு
நைபிழை உளதேல் நவின்றிடேன் பிறர்பால்
  நண்ணிய கருணையால் பலவே.
கைபிழை யாமை கருதுகின் றேன்நின்
  கழற்பதம் விழைகின்றேன் அல்லால்
செய்பிழை வேறொன் றறிகிலேன் அந்தோ

திருவுளம் அறியுமே எந்தாய்.

உரை:

எந்தையாகிய சிவபெருமானே, பொய் கூறுதல் முதலிய குற்றங்கள் எண்ணிறந்தன செய்வேனாயினும், அவற்றுள் புல்லின் நுனியளவும் பிறர்க்கு வருத்தம் உண்டு பண்ணும் பிழை சிறிது உளதாயினும் வாயாற் சொல்ல மாட்டேன்; பிறர்பால் உண்டாகிய அருளுணர்வால் சிறு பிழைகள் பலவும் செய்ய நினைப்பதில்லேன்; நின்னுடைய திருவடிப் பேற்றின் கண் ஆர்வம் உடையனாவதன்றிச் செய்தற்குரிய பிழை வேறே ஒன்றும் அறியேன்; ஐயோ, எனது இந்நிலைமை தேவரீர் அறிந்ததன்றோ எ.று.

5.

இறக்கவும் ஆசை இல்லைஇப் படிநான்
இருக்கவும் ஆசைஇன் றினிநான்
பிறக்கவும் ஆசை இலைஉல கெல்லாம்
பெரியவர் பெரியவர் எனவே
சிறக்கவும் ஆசை இலைவிசித் திரங்கள்
செய்யவும் ஆசைஒன் றில்லை
துறக்கவும் ஆசை இலைதுயர் அடைந்து
தூங்கவும் ஆசைஒன் றிலையே.

உரை:

எந்தையாகிய சிவபிரானே, இவ்வுலகில் இறந்துபடுதற்கும் எனக்கு விருப்ப முண்டாகவில்லை; இப்படியே பயனற்றிருந் தொழிவதற்கும் விருப்பமில்லை; இறந்த பின் வேறு பிறப்பெடுக்கவும் ஆசை யுண்டாகிற தில்லை; இனி, இவ்வுலகில் இவர் பெரியவர் பெரியவர் எனக் கண்டோர் சிறப்பிக்கின்ற நிலையைப் பெற ஆசை கொள்ளவில்லை; மந்திர தந்திர சாலங்கள் செய்யவும் ஆசையில்லை; உலகியற் பற்றற்ற துறவி யாதற்கும் எனக்கு விருப்பமில்லை; இன்பம் சிறிதுமின்றி, துன்ப நிலையிலேயே இருக்கவும் விருப்புண்டாக வில்லை, காண். எ.று.

வினாக்கள் ;

1. ராமலிங்க அடிகளார் சிறுகுறிப்பு வரைக?
2. திருவருட்பாவை இயற்றியவர் யார்?
3. ராமலிங்க அடிகளாரின் சிறப்புகள் யாவை?

4. சிறுபிள்ளை விண்ணப்பத்தின் மையக்கருத்து யாவை?
5. இறைவனைப் பற்றி ராமலிங்க அடிகளாரின் கருத்தியாது?

**மேலும் தகவலுக்கு,**


1. மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிய திருவாசகம், மூலமும் சுப்ரமணிய பிள்ளை அவர்கள், உரை, பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு -2007.

2. https://www.thiruarutpa.org/Thirumurai/first/tm